அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 18/2013

எனது இலக்கம்:EST-9/DICIP/06/0212
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2013.09.04

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்திலுள்ள சிங்கள மற்றும் ஆங்கிள உரைகளில் திருத்தங்களை மேற்கொள்ளல்.**

தாபன விதிக்கோவையின் தொகுதி II இலுள்ள XLVIII ஆம் அத்தியாயத்தின் மீது தங்களது கவனத்தைக் கோருகின்றேன்.

02. மேற்படி அத்தியாயத்தின் 23:9, 24:6, 27:10 மற்றும் 36:7 ஆம் உப பிரிவுகளின் சிங்கள மற்றும் ஆங்கிள உரைகளை உரிய முறையில் திருத்தி சீர்செய்யப்படவேண்டும் என 2013.07.25 ஆந்திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதற்கமைய தற்போது நடைமுறையிலுள்ள உரைக்குப் பதிலாக கீழ் வரும் உரைகள் பதிலீடு செய்யப்படுகின்றது.

(i) 23:9 உப பிரிவின் ஆங்கிள உரை

23:9. The effective date of the punishment imposed by the disciplinary authority on an accused officer after completion of a formal disciplinary inquiry or after calling for his explanations should be the date on which he committed the offence relevant to the charge.
இவ்வுபபிரிவின் சிங்கள உரையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

(ii). 24:6 உப பிரிவு

24:6 ஒழுக்காற்றுக் கட்டளையின் ஒரு பகுதியாக வேதனவேற்றத்தைப் பிற்போடவோ அல்லது குறைத்துவிடவோ அல்லது நிறுத்திவிடவோ விதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் அதனை மேற்படி 23:9 ஆம் உபபிரிவின் அடிப்படையிலேயே நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

(iii). 27:10 உப பிரிவின் ஆங்கிள உரை

27:10. Where legal proceedings are taken against a public officer for criminal offence or bribery or corruption, the relevant officer should be interdicted forthwith by the appropriate authority.
இவ்வுபபிரிவின் சிங்கள உரையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை

(iv). 36:7 உப பிரிவு

36:7. முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையில் முன்வைக்கப்பட்ட விடயங்களின்படி அலுவலர் ஒரு குற்றச்சாட்டுக்கோ அல்லது பல குற்றச்சாட்டுக்களுக்கோ குற்றவாளியென ஒழுக்காற்று அதிகாரியானவர் முடிவு செய்வாராயின் குற்றவாளியான குற்றத்தின் அல்லது குற்றங்களின் தன்மையின்படி அலுவலருக்குச் செலுத்தக்கூடியதாகவிருந்த ஓய்வுதியம்,பணிக்கொடை அடங்கலாக மற்றைய படிகளை இல்லாமல் செய்வது அல்லது ஏதேனுமொரு சதவீதத்தைக் குறைப்பது பற்றிக் குறிப்பிட்டு குற்றச்சாட்டுப்பத்திரம் மற்றும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணை அறிக்கை உள்ளடங்கலாக ஏனைய சகல ஆவணங்களுடனும் தமது அவதானிப்புக்கள் மற்றும் ஒழுக்காற்றுக்கட்டளை என்பவற்றை ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 12 ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தாமதமின்றி அரசாங்க நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பானவரான செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

ஒப்பம்/பி.பீ.அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு